THE HINDU

PAGE NO: 02 DATE: 26.11.2023

Sunday, November 26, 2023
CHENNAI

# K. Tharanikkarasu named Pondicherry University Vice-Chancellor in-charge

**The Hindu Bureau**
PUDUCHERRY

K. Tharanikkarasu, the senior-most Director of Pondicherry University, on Friday took office as Vice-Chancellor in-charge, following the completion of incumbent Gurmeet Singh's term.

According to a press note from the university, Prof. Singh, an expert in corrosion science and smart materials, had taken over for a five-year term as the Vice-Chancellor of Pondicherry University in 2017. The extension of his tenure by a year ended on November 23.



**Passing the baton:** K. Tharanikkarasu took over as Vice-Chancellor in-charge of Pondicherry University from Gurmeet Singh.

On demitting office, Prof. Singh handed over the charge to Prof. Tharanikkarasu. The outgoing Vice-Chancellor appreciated the statutory officers, faculty, staff and students for their support during his tenure, the press note said.

In a related development, the Executive Council of the University, at a meeting on Wednesday, designated two nominees for constituting a search committee for a new Vice-Chancellor for the Central university, as required under the Pondicherry University Act & Statutes. The advertisement calling for applications for the vacant post of Vice-Chancellor will be released soon, the university said.

DINAMANI

PAGE NO: 04

DATE: 26.11.2023

# புதுவை மத்திய பல்கலை. பொறுப்பு துணைவேந்தர் நியமனம்

**புதுச்சேரி, நவ.25:** புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த குர்மீத்சிங்கின் பதவி நீட்டிப்புக்காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து பேராசிரியர் கே.தரணிக்கரசு துணைவேந்தர் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.



புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் கே.தரணிக்கரசுக்கு வாழ்த்து தெரிவித்த முன்னாள் துணைவேந்தர் குர்மீத்சிங்.

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் குர்மீத்சிங் கடந்த 2017-ஆம் ஆண்டு நவம்பரில் பொறுப்பேற்றார். அவரது பதவிக் காலம் கடந்த ஆண்டு நவம்பர் 23-ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. இந்நிலையில், பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டு அவர் துணைவேந்தராகத் தொடர்ந்தார்.

தற்போது அவரது பதவி நீட்டிப்புக்காலமும் பூர்த்தியடைந்தது. இதையடுத்து புதிய துணைவேந்தர் நியமிக்கப்படும் வரையில் அந்தப் பொறுப்பை, பல்கலைக்கழக இயக்குநர் பேராசிரியர் கே.தரணிக்கரசுவிடம் வெள்ளிக்கிழமை குர்மீத்சிங் ஒப்படைத்தார்.

**தேடல் குழு நியமிக்கப் பரிந்துரை:** பல்கலைக்கழக விதியின்படி துணைவேந்தர் நியமிக்க நிர்வாகக் குழுக் கூட்டம் கூடி முடிவெடுக்கவேண்டும். அதன்படி, ஏற்கெனவே நிர்வாகக் குழு கூட்டம் கூட்டப்பட்டு அதில் தேடல் குழு அமைக்கும் வகையில் 2 பிரதிநிதிகள் நியமிக்க மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து புதிய துணைவேந்தர் நியமனத்துக்கான விண்ணப்பம் கோரி அறிவிப்பு வெளியாகலாம் என பல்கலைக்கழகத் தரப்பில் கூறப்பட்டது.